

TORONTO WARD BOUNDARY REVIEW

DRAW THE LINES

# ரொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு முதலாம் சுற்றுப் பொதுக் கலந்தாய்வு

# **கலந்தாய்வு வழிகாட்டி**

ஒக்டோபர் **2014**

**ரொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு** DRAW THE LINES
ரொறன்ரோ வட்டாரங்களின் பரிமாணத்தையும் வடிவமைப்பையும் பார்க்கின்றது. **www.drawthelines.ca**

# 1. முதலில் இதை வாசியுங்கள்

## பின்புலத் தகவல்கள்

### ரொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு ஏன் நடாத்தப்படுகின்றது?

ரொறன்ரோவிலுள்ள ஒவ்வொரு நபரும் ரொறன்ரோ நகரசபையில் முறையாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக ரொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு, சுயாதீனமான ஒரு ஆலோசகர் குழுவினால் நடாத்தப்படுகின்றது. தற்போது ரொறன்ரோ நகரம் கிட்டத்தட்ட 45,000 க்கும் 94,000 க்கும் இடையே வேறுபடும் சனத்தொகையைக் கொண்டுள்ள 44 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சனத்தொகை வளர்ச்சி மற்றும் புதிய கட்டமைப்புகள் போன்ற காரணிகளால் சில வட்டாரங்களின் சனத்தொகை நகரின் ஒரு சராசரி வட்டாரச் சனத்தொகையைவிட (கிட்டத்தட்ட 59,000) 30% முதல் 45% வரை உயர்ந்ததாக இருக்கின்றது. எனவே, ஒவ்வொரு ரொறன்ரோக் குடிமகனும் நகரசபையில் சமமாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை.

### ரொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு என்றால் என்ன?

ரொறன்ரோ வட்டாரங்களின் பரிமாணத்தையும் வடிவமைப்பையும் ரொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு பார்க்கின்றது.

ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்களின் எண்ணிக்கை நகரத்தின் ஏனைய வட்டாரங்களுடன் ஒத்திருப்பதை உறுதிப்படுத்தல் மீளாய்வின் ஒரு முக்கிய நோக்கமாகும். அத்துடன் இது புவியியல்ரீதியாக விருப்புக்குரிய சமூகங்களும் சுற்றுப்புறங்களும், பிரதான பௌதீக மற்றும் இயற்கை எல்லைகள், மற்றும் சனத்தொகையின் பொதுப்படையான மாற்றங்கள் போன்ற காரணிகளையும் கவனத்திற்கொள்கின்றது.

மாநகர அரசாங்கம் எவ்வாறு ஒழுங்குசெய்யப்படுகின்றது (உ+ம் அங்கு அரசியல் கட்சிகள் இருக்கவேண்டுமா அல்லது அங்கு கூடுதலான சமூகப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமா); மக்கள் எப்படி வாக்களிக்கின்றார்கள்; யார் வாக்களிக்கின்றார்கள் (உ+ம் கனடிய பிரஜைகள் மட்டும் அல்லது ரொறன்ரோ குடியிருப்பாளர்கள் அனைவரும்); ஒரு நகர சபை அங்கத்தவர் செய்யும் ஒரு பணியின் தரம்; அல்லது நகரத்தின் பிரிவுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பனவற்றை ரொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு **உள்ளடக்கமாட்டாது**.

தற்போதைய வட்டார எல்லைகளை மாற்றுவதற்கு இந்த மீளாய்வு முன்மொழியும். பரிந்துரைப்புக்களை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது பற்றி ரொறன்ரோ மாநகர சபை ஒரு இறுதித் தீர்மானத்தை எடுப்பதுடன் எந்தவொரு புதிய வட்டாரக் கட்டமைப்பையும் அமுல்படுத்துவதற்கு ஒரு துணைச் சட்ட விதியையும் நிறைவேற்றவேண்டும். மீளாய்வு காரணமாக ஏற்படும் மாற்றங்கள் 2018 இல் நடைபெறவிருக்கும் மாநகர சபைத் தேர்தலின்போது அமுலுக்கு வரும்.

### ரொறன்ரோ வட்டாரங்கள் பற்றி

பரிமாணம், மக்கள் சேர்க்கை மற்றும் சனத்தொகை ஆகியவற்றில் ரொறன்ரோவின் வட்டாரங்கள் வேறுபடுகின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள வாக்காளர்கள் உள்ளூர் மற்றும் நகர் பூராவுமுள்ள பிரச்சினைகள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்கும் அவர்களின் நலன்களை நகர சபையில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் ஒரு நகர சபை அங்கத்தவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். உங்கள் வட்டாரம் பற்றிய மேலதிக தகவல்கள் http://www.drawthelines.ca/wards இல் கிடைக்கப்பெறும்.

தற்போதைய வட்டார அமைப்பு 2000 இல் உருவாக்கப்பட்டது. இது ரொறன்ரோவை உள்ளடக்கிய 22 மத்திய தேர்தல் தொகுதிகளை (தேர்தல் மாவட்டங்கள்) பொது அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு தொகுதியும் தற்போதைய 44 வட்டார அமைப்பு முறையை உருவாக்குவதற்காகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## வட்டார எல்லைகளை மதிப்பிடுவதற்கான அடிப்படை

வட்டார எல்லைகளை வரையறுக்கும்போது அல்லது மீள வரையறுக்கும்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் சில அடிப்படைகள் கருத்திற்கொள்ளப்படுகின்றன. அவை எல்லாவற்றையும் எந்த வட்டார அமைப்பு முறையும் முற்றாகப் பூர்த்திசெய்யமாட்டாது; ஆகவே இந்த அடிப்படைகளை மிகத் திறமையாக நிறைவேற்றும் வட்டார அமைப்பே பரிந்துரைக்கப்படும் வட்டார அமைப்பாக இருக்கும். ஆய்வுக்கான கேள்விகளை நிரப்பும்போது பின்வரும் அடிப்படைகளைக் கருத்திற்கொள்ளவேண்டும்:

- **சனத்தொகை மூலம் பிரதிநிதித்துவம் செய்தல்:** ஒரு வெற்றிகரமான வட்டார அமைப்பில் ஒவ்வொரு நகர சபை அங்கத்தவரும் ஒரே எண்ணிக்கையான மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வார். இது பொதுவாக ‘வாக்காளர் சமத்துவம்’ எனக் குறிப்பிடப்படும். பொதுவாக, சராசரி அளவை விட 25% வரை கூடும் அல்லது குறையும் சனத்தொகை வேறுபாடுகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவை எனக் கருதப்படுகின்றன.

- **தற்போதைய மற்றும் எதிர்காலச் சனத்தொகையின் பொதுவான மாற்றங்களைக் கருத்திற்கொள்ளல்:** நகரம் வளர்ந்துகொண்டிருக்கும் அதே வேளையில் சனத்தொகையின் அடிப்படையில் தொடர்ந்து பிரதிநிதித்துவம் செய்தலைப் பூர்த்திசெய்வதற்காக, சனத்தொகையின் எதிர்கால அதிகரிப்புக்களை அல்லது வீழ்ச்சிகளை ஒரு வட்டார எல்லை மீளாய்வு கருத்திற்கொள்ளவேண்டும். இதன் இலக்கு 3 தேர்தல்களுக்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு முறையை வடிவமைத்தலாகும். சனத்தொகை முன்கணிப்புகளை http://www.drawthelines.ca/wards இல் கண்டறியலாம்.

- **இயற்கை மற்றும் பௌதீக எல்லைகளைக் கருத்திற்கொள்ளல்:** இயற்கை மற்றும் பௌதீக எல்லைகள் நகரங்களின் வாழ்க்கை முறைகளை வடிவமைக்கின்றன. ஆகவே, வட்டார வடிவமைப்புகள் இந்த அம்சங்களுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.

- **விருப்புக்குரிய சமூகங்கள்:** குறிப்பிட்ட புவியியல் இடங்களில் குடியேறும் முறைகள், பாரம்பரிய சுற்றாடல்கள் மற்றும் குறித்த இடத்திலுள்ள சமூகக் குழுக்களை வட்டார எல்லைகள் கருத்திற்கொள்ளவேண்டும். வட்டார எல்லைகள் இயன்றவரை ஒரு சமூகத்தைக் கூறுபோடக்கூடாது.

- **வினைத்திறனான பிரதிநிதித்துவம்:** அனைத்து வட்டார எல்லை மீளாய்வுகளின் இறுதி இலக்கைக் கருத்திற்கொள்ளும்போது, வினைத்திறனான பிரதிநிதித்துவம் முடியுமானவரையில் அனைத்து வாக்காளர்களும் நியாயமான மற்றும் சமத்துவமான பிரதிநிதித்துவம் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது வாக்காளர் சமத்துவம், ஆனால் வினைத்திறனான பிரதிநிதித்துவம் ஏனைய அடிப்படைகளையும் கருத்திற்கொள்கின்றது.

**இயற்கை மற்றும் பௌதீக எல்லைகளின் உதாரணங்கள்:**

- மலைகள், பள்ளத்தாக்குகள், நதிகள்
- மனிதனால் உருவாக்கப்பட்ட நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் போன்றவை
- பூங்காக்கள், சாலைகள் போன்ற பசுமை வெளிகள்

**விருப்புக்குரிய சமூகங்களின் உதாரணங்கள்:**

- சுற்றுப்புறங்கள்
- பாரம்பரியப் பாதுகாப்பு மாவட்டங்கள்
- வணிக மேம்பாட்டு இடங்கள்
- ஒரே இடத்தில் வாழும் இன-கலாச்சாரக் குழுக்கள்

றொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு பற்றிய மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து செல்லுங்கள்: www.drawthelines.ca

# 2. ஒரு ஆய்வைப் பூர்த்திசெய்யுங்கள்

ரொறன்ரோவின் தற்போதைய வட்டாரங்கள் பற்றிக் குடியிருப்பாளர்களும் பங்குதாரர்களும் என்ன நினைக்கின்றார்கள் என்பதைக் கேட்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்விலுள்ள கேள்விகள் டிசெம்பர் 2014 மற்றும் ஜனவரி 2015இல் நடைபெறவிருக்கும் 12 பொதுக் கூட்டங்களில் கேட்கப்படும். இந்த ஆய்வை நீங்கள் இணையத்திலும் பூர்த்திசெய்யலாம்.

இந்தக் கேள்விகளிலிருந்து பெறப்படும் பின்னூட்டம் ரொறன்ரோ வட்டாரங்களைக் கட்டமைப்பதற்கான பல தெரிவுகளின் வளர்ச்சியை அறியத்தரும். தெரிவுகள் உருவாக்கப்பட்ட பின்னர் ஒரு இரண்டாம் 'சுற்று' கலந்தாலோசனை இடம்பெறும், இது மே 2015 இல் ஆரம்பமாகும். முன்மொழியப்பட்ட வட்டார எல்லைத் தெரிவுகள் பற்றிய பின்னூட்டம் வழங்குவதற்கான ஒரு சந்தர்ப்பம் அந்நேரத்தில் மக்களுக்கும் பங்குதாரர்களுக்கும் கிடைக்கப்பெறும்.

**உங்கள் பதில்களைச் சமர்ப்பிப்பதற்கான தெரிவுகள்:**

1) **இணையத்தில்:** உங்கள் பதில்களை நேரடியாக www.drawthelines.ca/survey இணைய ஆய்வினூடாகப் பூர்த்திசெய்யுங்கள்
2) **அனுப்பவும்:** உங்கள் பதில்களை இந்தப் படிவத்தில் நிரப்பி அனுப்புங்கள்:
   a. கடிதமூலம் (Toronto Ward Boundary Review; 555 Richmond St. W, PO Box 612, Suite 402, M5V 3B1)
   b. தொலைநகல் மூலம் (416.365.0650)
   c. மின்னஞ்சல் மூலம்: info@drawthelines.ca
3) **ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுங்கள்:** திகதிகளுக்கும் இடங்களுக்கும் இங்கே செல்லுங்கள் www.drawthelines.ca/meetingdates

## ⇨ இங்கே ஆரம்பிக்கவும்

o பின்புலத் தகவல்களை நான் வாசித்துள்ளேன்.

a) உங்கள் வட்டாரம்: ____________________________

b) உங்கள் நகர சபை அங்கத்தவர்:___________________

**உங்கள் வட்டாரத்தை அல்லது நகர சபை அங்கத்தவரைத் தெரியவில்லையா?**
தெரிந்துகொள்வதற்கு http://app.toronto.ca/wards/jsp/wards.jsp இல் உங்கள் முகவரியை உள்ளிடவும்.

---

**1. உங்கள் வட்டாரத்தின் தற்போதைய எல்லைகள் தொடர்பான கரிசனைகள் ஏதாவது உங்களுக்கு இருக்கின்றதா?**

o ஆம் o இல்லை

ஆம் என்றால், விரிவாக விவரியுங்கள்:

| |
|---|
| |

**2.** **“விருப்புக்குரிய சமூகங்கள்” என்பது சுற்றுப்புறங்கள் அல்லது ஒரே இடத்தில் வாழும் இன-கலாச்சாரக் குழுக்கள் ஆகும். உங்கள் வட்டாரத்திலுள்ள எல்லைகள் விருப்புக்குரிய சமூகங்கள் எதையாவது பிரிக்கின்றதா?**

o ஆம் o இல்லை

ஆம் என்றால், எது(எவை) அத்துடன் அவை எங்கே இருக்கின்றன:

**3.** **தற்போதைய ரொறன்ரோ வட்டாரங்கள் சனத்தொகையில் கிட்டத்தட்ட 45,000 இலிருந்து 94,000 க்கிடையில் வேறுபடுகின்றன. ஒரு நகர சபை அங்கத்தவர் அந்த வட்டாரத்தைத் திறம்பட பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒரு ரொறன்ரோ வட்டாரத்தின் சனத்தொகை எதுவாக இருக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

**4.** **2031ம் ஆண்டளவில் ரொறன்ரோவின் சனத்தொகை 3.2 மில்லியன் ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உங்கள் கருத்துப்படி, சிறந்த பிரதிநிதித்துவம் பெறுவதற்கு ரொறன்ரோவில் மொத்தமாக எத்தனை வட்டாரங்கள் இருக்கவேண்டும்?**

**5.** **மாகாண அல்லது மத்திய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் போன்று ரொறன்ரோ வட்டார எல்லைகளுக்குப் பெறுமதி இருக்குமா?**

o ஆம் o இல்லை

தயவுசெய்து ஏன் என்று எங்களுக்குக் கூறுங்கள்:

**6.** **ரொறன்ரோ வட்டார எல்லைகள் பற்றி உங்களிடம் வேறு ஏதாவது கருத்துக்கள் உள்ளனவா? தயவுசெய்து விபரிக்கவும்:**

உங்களுடைய உள்ளீடுகளை வழங்குவதற்கு நேரம் ஒதுக்கியமைக்கு நன்றி.

*இந்த ஆய்வு அநாமதேயமானது. எல்லாக் கருத்துக்களும் பொதுக் குறிப்பேட்டின் பகுதியாக வருவதுடன் ரொறன்ரோ வட்டார எல்லை மீளாய்வு செயற்திட்டத்தின் பகுதியாகவும் பயன்படுத்தப்படும். கேள்விகள் ஏதாவது இருப்பின் The Project Manager, TWBR, Suite 402, P.O. Box 612, Toronto, Ontario என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது 416-365-0816 நீட்டிப்பு 223 இல் தொடர்புகொள்ளலாம்.*

# 3. தொடர்பில் இருங்கள்

இந்த ஆய்வின் பெறுபேறுகளின் ஒரு சுருக்கம், ரொறன்ரோ வட்டார எல்லைகள் மீளாய்வு (TWBR) பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்களையும் சமூகக் கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களையும் பெற்றுக் கொள்வதற்குத் தயவுசெய்து இங்கே பதிவுசெய்யுங்கள் http://www.drawthelines.ca/mailing-list-sign-up

**தொடர்புத் தகவல்கள்**

- இணையதளத்திற்குச் செல்லுங்கள்: www.drawthelines.ca
- எங்களைப் பின்தொடருங்கள்:Twitter @drawthelinesTO
- எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்: info@drawthelines.ca